இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

1.6.1.1 மீண்டெழும் செலவினம்

மீளாய்வாண்டில் குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டின் மூலம் அபிவிருத்தி மானியங்கள், கட்டணங்களுக்காக ஒதுக்கிடப்பட்டிருந்த ரூபா 419,000,000 நிதிக்கூற்றில் படிவம் ஏசிஏ – 02, மற்றும் ஏசிஏ 2(i,ii,iii), என்பவற்றில் குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டிற்குரிய நிரலில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாட்டு நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாட்டு நிரலில் அதே தொகையால் அதிகரித்தும், குறைநிரப்பு மதிப்பீடு ஏற்பாட்டு நிரலில் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

1.6.1.2 மூலதன செலவினம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிச்செயலாற்றல்கூற்றில் காட்டப்பட்டிருந்த நிதியல்லா சொத்துக்களின் கொள்வனவு மற்றும் புனரமைப்பும் மேம்படுத்தல்களும் கூட்டுமொத்தம் ரூபா 28,843,808 திறைசேரிப்புத்தகத்தில் (படிவம் SA -82 கூட்டுமொத்தம் ரூபா 28,703,657 ஆகக் காட்டப்பட்டிருந்தமையால் கூட்டு மொத்தம் ரூபா 140,151 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாவட்டச் செயலகத்தில் பொருத்தப்பட்டிருந்த இடி மின்னல் தாங்கி செயல்வலுவற்றிருந்தமை மற்றும் மின் ஆளிகள் உரியவாறு தணிக்கை (Switch off) செய்யப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டில் இடி மின்னல் தாக்கத்தினால் நிர்வாகக்கிளை, திட்டமிடல்கிளை போன்ற ஒரு சில பிரிவுகளினால் பயன்படுத்தப்பட்டு வந்த கணனிகள், போட்டோ ஒளிப்படப் பிரதியெடுக்கும் உபகரணங்கள் பழுதடைந்ததுடன் அவற்றினை திருத்தம் செய்வதற்கு மூலதன செலவின வகுதியில் தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் கொள்வனவு செய்தலுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி கூட்டுமொத்தம் ரூபா 5,634,060 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

1.6.2 நிதி நிலமை தொடர்பான கூற்று

1.6.2.1 நிதியல்லாத சொத்துக்கள்

மீளாய்வாண்டிற்கான நிதிநிலமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்த ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 1,383,024,529 திறைசேரிப்புத்தகத்தில் (படிவம் SA – 82) கூட்டுமொத்தம் ரூபா 1,378,575,634 ஆகக் காட்டப்பட்டிருந்தமையால் கூட்டுமொத்தம் ரூபா 4,448,895 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

1.6.2.2 கட்டு நிதிக் கணக்கு மீதி

முதியோர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக தேசிய முதியோர் செயலகத்தினால் 29 திசெம்பர் 2023 அன்று மாவட்டச் செயலகத்தின் வங்கிக் கணக்கில் வைப்பிடப்பட்டிருந்த கட்டு நிதி ரூபா 8,000,000 மீளாய்வாண்டில் குறித்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவோ, அன்றேல் திறைசேரிக்கு திருப்பியனுப்பப்பட்டிருக்கவோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் அத் தொகையானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காசும் காசுக்குச் சமனானவையுமாகக் காட்டப்பட்டிருக்காது முற்றாக விடுபட்டிருந்தது.

1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

உலக உணவுத் திட்டத்திற்கான ஒத்துழைப்பு கூட்டணி செயலகத்திடமிருந்து பெறப்பட்டிருந்த நிதிஒதுக்கீட்டிலிருந்து 04 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த நிவாரணப்பொதி ஏற்றியிறக்கல் கொடுப்பனவு கூட்டுமொத்தம் ரூபா 6,667,967 இற்குரிய படிவம் F14 கணக்காய்விற்குக் கிடைத்திருக்காமையால் ஏற்றியிறக்கப்பட்டிருந்த பொதிகள், கூலியாட்களும் கட்டணங்களும் என்பவற்றினை விநியோகிக்கப்பட்டிருந்த பொதிகளுடன் தொடர்புபடுத்தி இக் கொடுக்கல் வாங்கலினைக் கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கருத்திட்டம் - 1 இற்கான மீண்டெழும் செலவின வகுதியின் 09 விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 39,745,638 நிதியேற்பாட்டில் 7 தொடக்கம் 74 சதவீதம் வரையான வீச்செல்லையில் சேமிக்கப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்டவாறான அத்தகைய செயற்பாடுகள் நலிவடைந்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் கருத்திட்டம் 1 இற்கான மூலதனச் செலவின வகுதியின் 03 விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் கூட்டுமொத்தம் ரூபா 3,241,094 6 தொடக்கம் 53 சதவீதம் வரையான வீச்செல்லையில் சேமிக்கப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்டிருந்த அத்தகைய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காதிருந்தன.

2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 05 அமைச்சுக்கள் மற்றும் 02 திணைக்களங்களுக்குரிய மீண்டெழும் செலவின வகுதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் கூட்டுமொத்தம் ரூபா 6,269,256 ஆனது 6 தொடக்கம் 28 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் என்பவற்றினால் முறையே இரு மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் கூட்டுமொத்தம் ரூபா 1,209,281 17 தொடக்கம் 66 சதவீதம் வரையிலான வீச்செல்லையில் குறித்த நோக்கத்துக்கு பயன்படுத்தப்பட்டிருக்காது சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 2020/2021 காலப்பகுதிகளில் கொவிட் 19 விசேட கொடுப்பனவுக்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட நிதியில் ரூபா 1,719,580 உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இம் மீதியானது உரியவாறு திறைசேரிக்கு நாளதுவரை மீளளிப்பு செய்யப்பட்டிருக்காது முறையே புதுக்குடியிருப்பு மற்றும் வெலிஓயா சமுதாய அடிப்படை வங்கிகளில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, ஒட்டுசுட்டான், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் மாவட்டச் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகம் என்பவற்றினால் முறையே 47 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த வாழ்வாதார அபிவிருத்திக் கடன், மீள்சுழற்சிக்கடன், சுயதொழில் கடன், பயிர்ச்செய்கைக்கடன் கூட்டுமொத்தம் ரூபா 2,939,859 கடந்த 01 தொடக்கம் 09 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது தொடர்ந்தும் நிலுவைகளாக விடப்பட்டிருந்தன.

(உ) புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு மற்றும் ஒட்டுசுட்டான் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் 6,163 பயனாளிகளின் 05 வகையான வங்கிக் கணக்குகளின் மீதி கூட்டுமொத்தம் ரூபா 26,299,722 செயற்பாடற்ற வங்கிக் கணக்கு மீதிகளாக விடப்பட்டிருந்தன. அவற்றை செயற்பாடுள்ள வங்கிக் கணக்குகளாக மாற்றுவதற்கு நாளது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்லரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமைகள்
(அ)	அரச நிர்வாக சுற்றறிக்கை		
(i)	2022 மார்ச் 08 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 04/2022	7,391,394	மீளாய்வாண்டில் மின்சார நுகர்வு கட்டுப்படுத்தப்பட்டு சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காது மாவட்டச்செயலகம், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலகங்களினால் சனவரி மாதம் மற்றும் வருட சராசரி என்பவற்றுடன் ஒப்பிடும் போது திசெம்பர் மாதம் வரையில் 14 சதவீதம் தொடக்கம் 172 சதவீதம் வரையிலான வீச்செல்லையில் மின் நுகர்வு அலகுகளின் பாவனையில் கணிசத் தன்மையான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.
(ii)	2009 ஏப்ரல் 16 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 09/2009		மீளாய்வாண்டிலும் நாளது வரையிலுமாக மாவட்டச் செயலகத்தில் தொழிற்படும் தொழிற்துறைத் திணைக்களம், மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் என்பவற்றின் 13 அலுவலர்கள் நாளாந்த தினவரவினை

			கைவிரலடையாள பதிவு இயந்திரம் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.
(ஆ)	நிதி ஒழுங்கு விதிகள்		
	(i) இலக்கம் 66	1,913,457	மீளாய்வாண்டில் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு வகைமாற்றல் நடைமுறையின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் முறையே 6 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வரையிலான வீச்செல்லையில் பயன்படுத்தப்பட்டிருக்காது சேமிப்பாக விடப்பட்டிருந்தன.
	(ii) இலக்கம் 115 (4)		31 திசெம்பர் 2021 அன்று முடிவுறுத்தப்பட்டிருந்த Task force Rehabilitation (TFR) செயற்றிட்ட நிதியளிப்பு மூலமான 43 வேலைகளுக்குரிய கொடுப்பனவு கூட்டு மொத்தம் ரூபா 12,995,502 உரிய அமைச்சின் செயலாளரிடம் அனுமதி பெறப்பட்டிருக்காது முறையே ஒட்டுசுட்டான் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர்களினால் கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டு மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.
(இ)	**சனாதிபதி செயலக சுற்றறிக்கை**		
	2020 செப்தெம்பர் 15 ஆம் திகதியிடப்பட்ட PS/GPA/Circular/29/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பந்தி 02 மற்றும் 03		மீளாய்வாண்டில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் 08 அலுவலர்கள் பொதுமக்கள் தினமான திங்கட்கிழமைகளில் மாவட்ட செயலகத்திற்கு

			கடமைக்கு அறிக்கையிடப்பட்டிராத 82 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
(ஈ)	**2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி** பிரிவு 3.4.3 (இ)	986,097	மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்டிருக்காத 03 வழங்குனர்களிடம் காகிதாதிகள் மற்றும் அலுவலகத்தேவைப் பொருட்கள் முறையே மாந்தைகிழக்கு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.
(உ)	வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு சுற்றுநிருபம் ---------- 2016 செப்தெம்பர் 26 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2016/5	7,246,500	புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் வசித்து வந்த வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு நிதியத்தின் பயனாளிக் குடும்பங்களினது க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர்தரம் கற்கும் 492 செலுத்தப்பட்டிருக்க வேண்டிய 41 மாதங்களுக்குரிய சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவு நாளது வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.4 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தினால் 02 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த நெல் கொள்வனவுக்கான முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 20,729,785 இல் கூட்டுமொத்தம் ரூபா 14,659,125 அல்லது 70 சதவீதமானது தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றியிருந்து பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் மாவட்ட செயலகத்திலிருந்து 2021 மார்ச் மாதம் கரையோர மூல வள முகாமைத்துவத் திணைக்களத்திற்கு இடம் மாற்றலாகிச் சென்றிருந்த முறையே 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வேண்டிய இரு வகையான பதவியினர் கடன் நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 250,159 கடந்த 06 மாதங்கள் தொடக்கம் 03 ஆண்டுகளாக அறவிடப்படட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5 வைப்புக்கள்

பல்வேறுபட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 263,787 உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்காது 01 வருடத்திற்கு மேலாக பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்பெறாமை

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினூடாக 2016 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் கூட்டு மொத்தம் ரூபா 657,500 ஏற்படுத்தப்பட்டிருந்த சூரிய மின்னுற்பத்தி முறைமையின் மூலம் 05 KW கொடுப்பனவு கிரயத்தில் மாதாந்தம் 432 (kwh) மின்னுற்பத்தி எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் இக் கலத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டிருந்த மொத்த மின்னலகுகள், மற்றும் இலங்கை மின்சார சபையிடமிருந்து கிடைத்த வருவாய்கள் / மாதாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட மின்னலகுகள் உபயோகப்படுத்தப்பட்டிருந்த முறைமை என்பன கடந்த 07 ஆண்டுகளாக கிடைத்திருக்கவில்லையாதலால் இச் செயற்பாட்டின் மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்த விளைவுகளினை ஒப்பிட்டு பரீட்சித்து உறுதிப்படுத்த முடியவில்லை.

3.2 முறையற்ற கொடுப்பனவுகள்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டில் முன்னறிவித்தலின்றி கடமைக்கு சமுகமளிக்காதிருந்த 04 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் கடமைக்கு சமுகமளிக்காதிருந்த காலப்பகுதிகளுக்கு கூட்டுமொத்தம் ரூபா 331,235 வேதனாதிகள் (Personnel Emoluments) முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஏவ்வாறாயினும் அவற்றை உரிய தரப்பினரிடம் அறவிட்டுக் கொள்வதற்கு நாளது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணிப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தினது கடமைகளை மேற்கொள்வதற்காக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடமையாற்றியிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தரொருவர் 09 மார்ச் 2022 தொடக்கம் 31 அக்டோபர் 2022 வரையான காலப்பகுதியில் அனுமதியின்றி கடமைக்குச் சமுகமளித்திராத போதிலும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரினால் காணிப்பதிவாளர் நாயகத்துக்கு உரிய காலப்பகுதியில் அறியக்கொடுத்திருக்காமையால் அவ் அலுவலருக்கு மேற்படி காலப்பகுதிக்கு கூட்டு மொத்தம் ரூபா 381,440 வேதனாதிகள் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.3 வாகனங்களின் பயன்படுத்துகை

குடிசன தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தினது செயற்பாடுகளுக்காக மாவட்ட புள்ளி விபரவியல் கிளைக்கு மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த வாகனமொன்று கூட்டுமொத்தம் ரூபா 200,000 க்கு திருத்தம் செய்யப்பட்ட பின்னர் உபயோகப்படுத்தப்பட்டிருக்காது 09 மாதங்களாக மாவட்டச் செயலகத்தின் வாகன தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்தது.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தில் 2 ஆவது தளத்தில் ஏற்கனவே புள்ளிவிபரவியல் கிளை அலுவலக செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த பிரிவிடல் பகுதியும் கீழ்ற்றளத்தில் புதிதாக பிரிவிடல் மூலம் அமைக்கப்பட்டதுமான இரு அலுவலக அறைகளும் பூரணப்படுத்தப்பட்டு குறித்த நோக்கங்களுக்கு நாளதுவரை பயன்படுத்தப்பட்டிராது கைவிடப்பட்டிருந்தன.

3.5 அதிகாரமற்ற கொடுப்பனவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) உள்ளக (Internship) மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபை (VTA) பயிலுனர்களுக்கான பயிற்சிக்காலக் கொடுப்பனவு வருடாந்த செலவின மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் 2021 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியில் மாவட்டச் செயலகத்தின் ஏனைய படிகள் (Other Allowance – 1003) தேவைக்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி கூட்டுமொத்தம் ரூபா 3,349,250 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தின் கணக்காளர் பதவிக்கு அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மாவட்டச் செயலாளரினால் 2019 மே 07 ஆம் திகதி பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டு 2019 மே 08 ஆம் திகதி தொடக்கம் 2023 மே வரையான காலப்பகுதிக்கு புதுக்குடியிருப்பின் பிரதேச செயலகத்தின் கணக்காளராக நியமிக்கப்பட்டிருந்த அலுவலருக்கு பதிற்கடமை வேதனம் கூட்டுமொத்தம் ரூபா 667,337 செலுத்தப்பட்டிருந்தது.

3.6 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது மக்களுக்கு வழங்கியிருந்த காணிகளின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டிருக்க கடந்த 05 ஆண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலாளரினால் காணி ஆணையாளர் நாயகம், வடக்கு மாகாண காணி ஆணையாளர் ஆகியோருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பின் தொடர் நடவடிக்கைகள் (Follow-Up actions) நலிவடைந்திருந்திருந்தன. இதன் காரணமாக பெறவேண்டிய குத்தகை கட்டணங்களினை உரிய காலங்களில் அறவிடப்பட முடியாதிருந்ததுடன் பல்வேறுபட்ட தரப்பினரும் அரச காணிகளை அனுமதியற்ற நிலையில் பல்வேறுபட்ட விஸ்தீரண அளவுகளில் உபயோகித்து வந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வடக்கு மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டிருந்த குடியேற்ற உத்தியோகத்தர் (Colony Officer) அவர்களினால் அடையாளப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய துணுக்காய் பிரதேசத்திலுள்ள அரச காணிகள் சரிவர பரிசீலிக்கப்பட்டு அடையாளங்காணப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க கடந்த 15 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அரச காணிளை சரிவர அடையாளம் கண்டு பதிவேட்டிலிட்டு 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரச காணிகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கையெடுத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு

உத்தமமான வகையில் கையுதிர்த்தல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து வழிகாட்டுதல் தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் நாளது வரை நலிவுற்றிருந்தன.

(இ) காணி உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டிருந்த பயனாளிகளின் தற்போதைய உயிர் வாழ்நிலை, அக்காணிகளின் தற்போதைய நிலை என்பவற்றுடன் ஒப்பிட்டு காலத்துக்கு காலம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டிருக்க காணி உத்தியோகத்தர் மூலம் பிரதேச செயலாளர்களால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமையால் அக் காணிகளின் பயனுறு பாவனை/ பின்னுரித்தாளர்களினினை செயற்படுத்துதல்/ மீளவும் காணிக் கச்சேரியினூடாக செயற்படுத்துதல் அவை தொடர்பிலான காணிப் பிணக்குகளை தீர்த்து வைத்தலும் முடிவு கட்டுதலும் போன்ற செயற்பாடுகளில் கரைதுறைப்பற்று மற்றும் துணுக்காய் பிரதேச செயலகங்களில் கணிசத் தன்மையான நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) மாந்தை கிழக்கு பிரதேச செயலக எல்லையினுள் 67 தரப்பினர்களுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் 2021-2023 ஆண்டு வரையிலான காலப்பகுதிகளில் காணிப்பயன்பாட்டுக் குழு தீர்மானத்தின் பிரகாரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் நாளது வரை உத்தேச விலை மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருமானத்தை அறவீடுவதற்கான ஆககபூரவமான நடவடிகைகைள எடுகபபடடிருகவிலலை.

(உ) மீளாய்வாண்டிலும் நேர்முன்னைய ஆண்டுக்குமாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினால் அங்கவீனமுற்றவர்கள், சிறுநீரக நோயாளர், 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் 100 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் போன்ற தெரிவு செய்யப்பட்டிருந்த 154 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டிய கொடுப்பனவுகள் கூட்டுமொத்தம் ரூபா 2,788,300 சமூக சேவைகள் திணைக்களத்தினால் நிதி விடுவிக்கப்பட்டிராமையால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

3.7 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குடியேற்ற உத்தியோகத்தரினால் 2019 ஆம் ஆண்டு அடையாளப்படுத்தப்பட்டு காணி ஆணையாளர் நாயகத்தின் 2021/ 02 ஆம் இலக்கமிடப்பட்ட 2022 அக்டோபர் 22 திகதிய சுற்றறிக்கைக்கமைவாக நியமிக்கப்பட்ட துணுக்காய் பிரதேச செயலகத்தின் செயற்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டிற்கமைவாக மேலதிகமாக காணி ஆணையாளர் நாயகத்தின் 2018/02 ஆம் இலக்கமிடப்பட்ட 2018 மார்ச் 28 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக்கமைவாகவும் அறவிடப்பட்டிருக்க வேண்டிய 19 அரச காணிகளுக்குரிய குத்தகைக் கட்டணம் கூட்டு மொத்தம் ரூபா 3,268,790 கடந்த 01

தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துணுக்காய் பிரதேச செயலாளரினால் பயனாளியொருவருக்கு தற்காலிக குத்தகையடிப்படையில் 2014 ஆம் ஆண்டு கையுதிர்க்கப்பட்டிருந்த 29 ஏக்கர் விஸ்தீரணமுடைய அரச காணிக்குரிய குத்தகைக் கட்டணம் கூட்டு மொத்தம் ரூபா 1,480,000 நாளது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.8 குறித்த நோக்கத்துக்கு உபயோகிக்கப்பட்டிராத நிதிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு என்பவற்றால் பல்வேறு கட்டங்களாக 98 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கான கொடுப்பனவுகள் ரூபா 13,405,280 உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்காது புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், உடையார்கட்டு சமுர்த்தி வங்கிக் கணக்குகளில் 01 தொடக்கம் 04 ஆண்டுகளாக குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காது தேக்கி வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) சமுர்த்தி வாழ்வாதார உதவி கொடுப்பனவினை பெற்றுவந்த 135 பயனாளிகளின் கணக்கு மீதிகள் ரூபா 32,106 தொடக்கம் ரூபா 175,749 எனும் வீச்செல்லையில் கூட்டுமொத்தம் ரூபா 8,443,715 உதவு தொகைகள் வாழ்வாதார நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்காது பயனாளிகளின் சமுர்த்தி வங்கிக் கணக்குகளில் தேங்கி காணப்பட்டன.

4 நிலைபேறான அபிவிருத்தி

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல்

2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளும் பொருட்டு மாவட்டச் செயலகத்தினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்த கொள்வதற்காகச் செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 06 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5 நல்லாளுகை

5.1 பொதுமக்களுக்குரிய சேவையை நிறைவேற்றுதல்

மாவட்ட செயலகத்திலுள்ள பல்வேறுபட்ட சேவை வழங்கும் நிலையங்கள் / அலகுகளினை பொதுமக்கள் இலகுவில் அறிந்து கொண்டு அத்தகைய சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பிரதான நுழைவாயில் / பொதுமக்கள் மாவட்ட செயலகத்திற்கு சேவை நாடி உள் நுழையும் முகப்பில் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய அலுவலக தள அமைப்பு வரைபடம் அமைக்கப்பட்டிருக்காமை மற்றும் சேவை பெறுநர் பட்டயமானது கீழ்ற்றளத்தின் ஒதுக்குப் புறத்தில் அமைக்கப்பட்டுள்ளமையால் சேவை பெறுநர்கள் குறித்த சேவை நிலையங்களையும் விபரங்களையும் அடையாளம் காணுதலுக்காக பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாந்தை கிழக்கு, வெலிஓயா, ஒட்டுசுட்டான், துணுக்காய், மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களில் முறையே 03 உதவி பிரதேச செயலாளர், 02 கணக்காளர், 05 நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் மாவட்டச் செயலகத்தின் பொறியியலாளர் பதவிகளுக்கான ஆளணி வெற்றிடங்கள் கடந்த 01 தொடக்கம் 10 ஆண்டுகளாக நிரப்பப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமையால் நிதி, நிர்வாக, அபிவிருத்தி வேலைத்திட்டச் செயற்பாடுகள் பாதிப்படைந்திருந்தன.

(ஆ) தொழில் நுட்ப உதவியாளர் அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அத்தகைய 06 அலுவலர்கள் கடந்த 05 தொடக்கம் 09 ஆண்டுகளாக இம் மாவட்டத்தின் குறித்தவொரு சேவை நிலையத்தில் மாத்திரம் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் இவ் இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சினால் கோரப்பட்டிருந்தும் அது செயற்படுத்தப்பட்டிருக்காது கைவிடப்பட்டிருந்தது.

(இ) வெலிஓயா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றும் இலங்கை நிர்வாக சேவை- தரம் I ஐச்சேர்ந்த அலுவலரொருவர் கடந்த 10 ஆண்டுகளாக இடமாற்றப்பட்டிருக்காது ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்ற பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) மாவட்டச் செயலகத்தின் கணக்காளரொருவர் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகத்தின் பதில் கணக்காளராக மாவட்டச் செயலாளரினால் நியமிக்கப்பட்டு 2023 யூலை 19 தொடக்கம் கடமையாற்றி வந்திருந்தார். எவ்வாறாயினும் அரச சேவை ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்டிருக்க வேண்டிய பதில் நியமனத்துக்கான அனுமதி நாளது வரை பெறப்பட்டிருக்கவில்லை.

பா.பற்குணன்
சிரேஸ்ட உதவிக்கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

அத்தியாயம் - 04

செயலாற்றுகைச் சுட்டிகள்

நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டுசுட்டிகள்	எதிர்பார்த்தவெளியீட்டின்சதவீதமாக (%) உண்மையானவெளியீடு		
	100 -90	**75-89**	**50-74**
வீட்டு வசதிகள் வழங்குதல்	✓		
வீட்டுத்தோட்டம் அமைத்தல்	✓		
சுகாதார சேவையினை தரமுயர்த்தல்	✓		
வகுப்பறைகளை திருத்தம் செய்தல்	✓		
போதைப் பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வளித்தல்	✓		
49 சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிகளை உருவாக்குதல்	✓		
போசாக்கு தன்மையை நிலை நிறுத்தல்	✓		

அத்தியாயம் - 05

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக.

நோக்கம்/ தூரநோக்கு	இலக்கு	அடைவுமட்டம் சுட்டிகள்	முன்னேற்றம்		
			0-49	50-74	75-100
1. வறுமையை ஒழித்தல்	2030ம் ஆண்டளவில் எல்லா மக்களின் வறுமையை இல்லாதொழித்தல்	பொருளாதார சிக்கலால் பாதிக்கப்பட்டுள்ள 273 குடும்பங்களை மேம்படுத்தல்			✓
2. பசியின்மை	அணைவருக்கும் உணவு	2144 வீட்டுத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.			✓
03. நல்ல ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு	போதைப்பொருள் பாவனை மற்றும் தீங்கு விளைவிக்ககும போதைபொருள் பாவனையில் இருந்து விடுவித்தல்	37 போதைப்பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வழித்து மீண்டும் சமூகத்தில் இணைத்தல்			✓
	தாய் இறப்பு விகிதத்தினை 2030ம் ஆண்டளவில் 100000 க்கு 70ற்கும் குறைவாக குறைத்தல்	குழந்தை கிடைக்கும் வரையில் வருமானம் குறைந்த 321 கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசக்கு உணவினை வழங்குதல்			✓
	2030ம் ஆண்டளவில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதத்தினை குறைத்தல்	வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 265 குழந்தைகளுக்கு போசக்கு உணவினை வழங்குதல்			✓
04. தரமான கல்வி	2030ம் ஆண்டளவில் எல்லா ஆண் பெண் பிள்ளைகளுக்குமான சமத்துவமான முதலாம் இரண்டாம் கல்வியினை உறுதிப்படுத்தல்	பாடசாலைக்கு செல்லக்கூடிய இடைவிலகிய 141 மாணவரகளை மீளவும் பாடசாலையில் இணைத்தல்			✓
05. நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்	உற்பத்தி அதிகரிப்பிற்கு ஆதரவளிக்கக்கூடிய கொள்கைகளை மேம்படுத்தல்	40 சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை உருவாக்குதல்			✓
		40 சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் அல்லது விவசாய ஏற்றுமதி சார் உற்பத்திகளை உருவாக்குதல்			✓
06. நிலைபேறான நகரமும் சமுகமும்	2030ம் ஆண்டளவில் அனைவருக்கும் போதுமான பாதுகாப்பு மற்றும் நியாய விலையில் வீடுகள் மற்றும் அடிப்படைத்தேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்தல்	18 வீடுகள் கட்டப்பட்டுள்ளன			✓
07. காலநிலை மாற்றம் அதன்	காலநிலை தொடர்பான ஆபத்துக்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளுக்கு மீளுருவாக்கம் தழுவல்	13 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன			✓

தாக்கங்களை எதிர்த்து போராட அவசர நடவடிக்கை எடுத்தல்	திறனை அதிகரித்தல்				

5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விளக்குக.

- பொருளாதார பிரச்சினைகள் மற்றும் உள்ளூர் உற்பத்திபொருட்களுக்குரிய விலை கிடைக்கமையினால் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் எமது இலக்கினை அடைய முடியவில்லை. இருப்பினும் சில இலக்குகள் அரசாங்கம் மற்றும் ஏனைய தரப்பி நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- காலநிலை தொடர்பா ஆபத்துக்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளுக்கு மீள்தன்மை மற்றும் தழுவல் திறனை வலுப்படுத்தல

அத்தியாயம் - 06

மனித வள விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	பதவி வெற்றிடம்	மேலதிகம்
சிரேஷ்ட	37	27	10	
மூன்றாம் நிலை	28	7	21	
இரண்டாம் நிலை	563	535	264	238
ஆரம்ப நிலை	75	40	32	
மொத்தம்	**703**	**609**	**327**	**238**

6.2 பற்றாக்குறையான மனித வளங்களினால் நிறுவனத்தின் செயலாற்றுகை கீழ்குறிப்பிட்ட வழிகளில் பாதிப்படையும்.

1. அதிக வேலைச் சுமை காரணமாக உத்தியோகத்தர்களுக்கு வேலைத்திருப்தி காணப்படாததால் அவர்கள் ஈடுபாட்டுடன் வேலையினை மேற்கொள்ள மாட்டார்கள் இது நிறுவனத்தின் இலக்கினை அடைவதில் பாதிப்பு ஏற்படும்

2. இரண்டாம் தர பதவியணியில் மேலதிக ஆளணி காணப்பட்டாலும் அதே தரத்தில் காணப்படும் பற்றாக்குறையான பதவியணியினரின் கடமைகளை இவர்களின் மூலம் நிறைவேற்றிக் கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. பற்றாக்குறையான மனித வளங்களினால் அதிக வேலைச் சுமையினை ஏனையவர்கள் சுமக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் இதனால்

1. மன உழைச்சல்
2. அட்டவணைக்கு ஏற்ப வேலையினை நகர்த்த முடியாமை
3. பொதுமக்களுக்கு உடனுக்குடன் சேவை வழங்குவதில் தாமதம் ஏற்படல்

இதனால் நிறுவனத்தின் இலக்கினை அடைய முடியாது. நிறுவன வளர்ச்சி பாதிப்படையும்.

அதே சமயம் அதிகப்படியான மனித வளங்களினால் அவர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் உட்பட அனைத்து இதர செலவுகளுக்குமான மதிப்பீடு அறிக்கையினூடாக நிறுவனத்தின் வருமானத்திலும் மற்றும் ஆளணியூடாக தேவையற்ற முரண்பாடுகள் பிரச்சினைகள் உருவாகுவதுடன் நிறுவனத்தின் நன்மதிப்பிலும் தாக்கம் செலுத்தி நிறுவன செயலாற்றுகை பாதிப்படையும்.

6.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினரின் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்ட காலம்	மொத்த முதலீடு (ரூபா.000)		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு(உள்நாடு, வெளிநாடு)	பெற்றுக் கொண்ட அறிவு
			உள்நாடு	வெளி நாடு		
புகைவண்டி ஆணைச்சீட்டுகளும் உள்நாட்டு கடமைகளும்	25	18-07-2023	14300.00		உள்நாடு	ஆணைச்சீட்டு பற்றிய அறிவு
விடுமுறை	25	18-07-2023	15000.00		உள்நாடு	விடுமுறை பற்றிய விளக்கம்
ஒழுக்காற்று நடவடிக்கை	25	19-07-2023	15700.00		உள்நாடு	ஒழுக்காற்று நடவடிக்கை
புகைவண்டி ஆணைச்சீட்டுகளும் உள்நாட்டு கடமைகளும்	25	19-07-2023	13000.00		உள்நாடு	ஆணைச்சீட்டு பற்றிய அறிவு
விடுமுறை	25	20-07-2023	13500.00		உள்நாடு	விடுமுறை பற்றிய விளக்கம்
ஒழுக்காற்று நடவடிக்கை	25	20-07-2023	14460.00		உள்நாடு	ஒழுக்காற்று நடவடிக்கை
பொதுச்சேவ ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்	61	21-11-2023	15650.00		உள்நாடு	ஆணைக்குழு பற்றிய தெளிவு
அலுவலக நடைமுறைகள்	65	22-11-2023	14500.00		உள்நாடு	அலுவலக நடைமுறைகள்
அலுவலக முகாமைத்துவம்	65	23-11-2023	14750.00		உள்நாடு	அலுவலக முகாமைத்துவம்
தாபன விதிக்கோவை	65	24-11-2023	14900.00		உள்நாடு	தாபன விதிக்கோவை
கணினி உபகரணங்களின் பயன்பாடு	45	22-12-2023	27120.00		உள்நாடு	கணினி பற்றிய அறிவு
அலுவலக நிர்வாக நடைமுறைகள்	45	22-12-2023	27120.00		உள்நாடு	நிர்வாக நடைமுறைகள்
அலுவலக நடைமுறையும்,	55	2 நாள்	19650.00		உள்நாட்டு	அலுவலக நடைமுறையும், திட்ட முன் மொழிவு தயாரித்தல் தொடர்பான அறிவு
கணக்கீட்டு முறைமை,	55	2 நாள்	19650.00		உள்நாட்டு	கணக்கீட்டு முறைமை, அலுவலக முறைமை, கணினிப் பயன்பாடு தொடர்பான அறிவு
அ.ஜீவிதா முதுகலை மாணி (வியாபாரம்)	1		157000.00		உள்நாட்டு	

களனி பல்கலைக் கழகம்						
இலஞ்ச ஊழல் தொடர்பான விழப்புணர்வு பயிற்சி நெறி	60	06.12.2023 (3 மணி)	11,400.00		உள்நாட்டு	அலுவலக உத்தியோகத்தர் மற்றும் பிரிவு உத்தியோகத்தர்கள் இலஞ்ச ஊழல் தொடர்பான விழப்புணர்வினையும் ,அறிவினையும் பெற்றுக் கொண்டு கிராம மட்ட உத்தியோகத்தர்கள் இலஞ்ச ஊழல் தொடர்பான விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தினர்.
நிதிப்பிரமாணங்கள்,தாபன விதிக்கோவை தொடர்பான அரசாங்க விதிமுறைகள்	60	12.12.2023 (6 மணி)	21,600.00		உள்நாட்டு	உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற நிதி ஒதுக்கீடுகளை வினைத்திறனான முறையில் நிதிப்பிரமாணங்களுக்கு அமைவாக பயன்படுத்துவதற்கான மேலதிக அறிவினைபெற்றுக் கொண்டதுடன், அலுவலக செயற்பாடுகளை தாபன விதிக்கோவைக்கு அமைவாக மேற்கொள்வதற்குரிய அறிவினையும் உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொண்டனர்.
உற்பத்தி திறன் தொடர்பான கள விஜயம்	50	19.12.2023 (1 நாள்)	80,000.00		உள்நாட்டு	தேசிய ரீதியில் உற்பத்தி திறன் போட்டியில் முதலாம் இடம் பெற்ற அலுவலகங்களை களவிஜயம் செய்து பார்வையிட்டதன் ஊடாக ஏற்கனவே உற்பத்தி திறன் போட்டியில் போட்டியிட்டு இரண்டாம் இடம் பெற்ற அலுவலகம் என்ற ரீதியில் மேலதிகமான உற்பத்தி திறன் தொடர்பான அறிவு ,நுணுக்கங்கள்,நு-ீசழனரஉவளைவைல தொடர்பான அறிவு அதிகரித்துள்ளதுடன் தற்போது அதனை எமது அலுவலகத்தில் நடைமுறைப் படுத்தி நு-ீசழனரஉவளைவைல இனை விருத்தி செய்யும் வகையில் மென்பொருளினையு

						ம் எமது உத்தியோகத்தர் ஒருவர் உருவாக்கி வெற்றியடைந்துள்ளார்.
உற்பத்தி திறன் தொடர்பான பயிற்சி நெறி	70	21.12.2023 (6 மணி)	35,000.00		உள்நாட்டு	உத்தியோகத்தர்களிடையே உற்பத்தி திறன் தொடர்பான நுணுக்கங்கள் ,எண்ணக்கருக்கள் பற்றிய மேலதிக அறிவு அதிகரித்துள்ளதுடன் அதனை அலுவலக செயற்பாடுகளில் பிரயோகித்து இலகுவான முறையில் நிறைவேற்றுவதற்குரிய அறிவினை பெற்றுக்கொண்டனர். (நு-ீசழனரஉவளைவைல இபுசநநஎீசழனரஉவளைவைல இஞரயடவைல ஐஅிசழளநஅநவெவுழழடளஇஊசநயவளைவைல யனெழைழெஎவழைஎயஉவளைவைநைள)
உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறன் கான் தடைகள் பரீட்சைகள், பதவி உயர்வுக்கான வழிகாட்டல் போன்ற விடயங்கள் தொடர்பான பயிற்சி செயலமர்வு	90	6 மணித்தியாலங்கள்	70,890.00		உள்நாடு	நிதிப்பிரமானம், தாபன விதிக் கோவை, உற்பத்தித் திறன் தொடர்பான அறிவு
லஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பான பயிற்சி	50	06 மணித்தியாலங்கள்	41050.00		உள்நாடு	லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான அறிவு
Prepare 1st EB Exam - DO	80	12days 14,15,16,17,21,22,23,24,28.02.2023 01,02,03.03.2023	52400.00		உள்நாடு	தாபனவிதிக் கோவை, நிதி ஒழுங்கு முறை. மற்றும் தகவல் தொழிநுட்பம் பற்றிய விளக்கம்
Efficiency bar Class for class I Officers of public Management Service Officers	10	10 Days 08,09,10,11,12,.05.2023 15,16,17,18,19.05.2023	71400.00		உள்நாடு	தாபனவிதிக் கோவை, நிதி ஒழுங்கு முறை, அலுவலக முறைமை பற்றிய விளக்கம்
Self and	50	2days	5400.00		உள்நாடு	யோகா கலை

Social integration and Introspection – Yoga Training		11.07.2023 12.07.2023				தொடர்பான விளக்கம்
Capacity Training Programe for OES	40	19.09.2023	19690.00		உள்நாடு	அலுவலக நடைமுறை பற்றிய விளக்கம்
RTI Training – District & Divisional	45	31.10.2023	25539.00		உள்நாடு	தகவல் அறியும் உரிமைச்சட்டம் பற்றிய விளக்கம்
Productivity Training – Group A	100	27.10.2023	10360.00		உள்நாடு	உற்பத்திதிறன் தொடர்பான விளக்கம்
Productivity Training – Group A Class ii	85	03.11.2023	6360.00		உள்நாடு	உற்பத்திதிறன் தொடர்பான விளக்கம்
Productivity Training – Group B	85	21-11-2023	7670.00		உள்நாடு	உற்பத்திதிறன் தொடர்பான விளக்கம்
Board of Survey Training Program	65	21-11-2023	31519.00		உள்நாடு	வருடார்ந்த பொருட் கணக்கெடுப்பு தொடர்பான விளக்கம்
Productivity Training – Group B Class ii	90	28-11-2023	8170.00		உள்நாடு	உற்பத்திதிறன் தொடர்பான விளக்கம்
Human Resource Development Plan	40	08-12-2023	12880.00		உள்நாடு	மனித வள அபிவிருத்தி திட்டம் பற்றிய அறிவு
Productivity Concepts-Samurdhi Department Staff	115	16-12-2023	44520.00		உள்நாடு	உற்பத்திதிறன் தொடர்பான விளக்கம்

நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கு

நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்காக பிரதேச மட்ட மக்களுக்கு வினைத்திறனான சேவை வழங்குதல் ,அரச கொள்கைகளுக்கு அமைவாக காலத்திற்கு காலம் கிடைக்கப்பெறுகின்ற மனித பௌதீக வளங்களை வினைத்திறன் விளைதிறனுடன் பயன்படுத்தி மக்களுடைய அடிப்படை வசதிகள் நிலைபேறான வாழ்க்கைத்தரம் என்பவற்றை உயர்த்துதல்.எனும் எமது அலுவலகத்தின் தூரநோக்கம் மற்றும் இலட்சிய நோக்கத்தின் அடைவுமட்டத்திற்கு இவ் பயிற்சித் திட்டமானது மிகுந்த பங்களிப்பை வழங்கியுள்ளது.

இதற்கமைவாக மேற்க்கூறப்பட்ட பயிற்சி நெறிகள் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் எமது நிறுவனத்தின் செயல்திறனுக்கு பங்களிப்பு செய்துள்ளன,

1 அரச வளங்களை வினைத்திறனாகவும்,விளைதிறனாகவும்,சரியாகவும் பயன்படுத்தும் பதவியணி உருவாகிவருகின்றது.

2 நேர்மனப்பாங்குள்ள அர்ப்பணிப்பு மிக்க உத்தியோகத்தர்கள் உருவாகி வருகின்றனர்.

3 சூழலுக்கு நட்புறவான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் திட்டங்களின் தயாரிப்பு இடம்பெற்று வருகின்றது.

4 பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய சேவையை வழங்கும் பதவியணி உருவாகி வருகின்றது.

5 பக்கசார்பற்ற சேவை வழங்கல் வெளிப்படைத்தன்மை காணப்படுகின்றது.

6 இலகுவான சேவை வழங்கும் வகையில் அலுவலகத்தை பௌதீக ரீதியிலும் மனிதவள ரீதியிலும் மேம்படுத்தக் கூடியதாகவுள்ளது.

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை

இல.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது / இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர் முற்பணக்கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக்கணக்குகள் (வர்த்தக முற்பணக்கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக்கணக்கு	-		
1.5	சிறப்பு முற்பணக்கணக்கு	-		
1.6	ஏனைய	-		
2	புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)			
2.1	பொதுநிர்வாக சுற்றறிக்கை 267/2018இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA- N 20) பதிவேட்டை புதுப்பித்தல்	இணக்கமானது		
03	நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை			

	ஒப்படைத்தல் (நி.பி.135)			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம் பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
4	வருடாந்த திட்டத்தினை தயாரித்தல்			
4.1	வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
5	கணக்காய்வு வினாக்கள்			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	உள்ளகக் கணக்காய்வு			
6.1	நி.பி.134 (2) டி.எம்.ஏ/ 1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்	இணக்கமானது		

7	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு			
7.1	டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணக்கமானது		
8	ஆதன முகாமைத்துவம்			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல.01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
9	வாகன முகாமைத்துவம்			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறுமாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்	-		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பந்தி 3.1 இன் படி விதிகளின்படி வாகனங்களின்	இணக்கமானது		

	எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்			
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		
10	வங்கி கணக்குகளின் முகாமை			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்	இணக்கமானது		
11	நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்	இணக்கமானது		
11.2	நி.பி.94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமானது		
12	அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமானது		
13	பொது வைப்புக்கணக்கு			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	முற்பணக் கணக்கு			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்.	இணக்கமானது		
14.3	நி.பி.371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		

15	வருமானக்கணக்கு			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் .	இணக்கமானது		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
16	மனித வள முகாமைத்துவம்			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
17	பொது மக்களுக்கான தகவல் வழங்கல்			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள்.'. குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமானது		
18	பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் .'.பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது	இணக்கமானது		

19	மனிதவள திட்டத்தினைத் தயாரித்தல்			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிகை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத்திட்டம், திறன் மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்	இணக்கமானது		
20	கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்கபட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்	இணக்கமானது		

முற்றும்